# நீங்கள் இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும், ஆயிரமடங்கு அதிகமாகும்படி . . . கர்த்தர் உங்களுக்குச் சொல்லியபடியே, உங்களை ஆசீர்வதிப்பாராக. உபா 1 : 11

**நீ வேண்டிக்கொண்டதை தேவன் அருள்வார்.**

கிறிஸ்துவுக்குள் என் அன்பு சகோதரனே, சகோதரியே,

"யாபேஸ் வேண்டிக் கொண்டதை தேவன் அருளினார்."

அதே தேவன் இன்றைக்கும் ஜீவிக்கிறார்.

ஆதலால், கட்டாயமாக நீங்கள் வேண்டிக்கொண்டதை தேவன் அருள்வார். மேலும், இந்த மாதத்தில் நீங்கள் வேண்டிக் கொள்ளப் போவதையும் கட்டாயம் தேவன் அருள்வார். வேதம் சொல்கிறது,

**"நீ விரும்புகிறபடியே உனக்கு ஆகக்கடவது"** – என்பதாக. ஆமென்.

**யாபேஸ் என்ன வேண்டிக்கொண்டார்?**

(1 நாளா 4 : 10) யாபேஸ் இஸ்ரவேலின் தேவனை நோக்கி,

1. தேவரீர் என்னை ஆசீர்வதித்து,
2. என் எல்லையைப் பெரிதாக்கி,
3. உமது கரம் என்னோடிருந்து,
4. தீங்கு என்னை துக்கப்படுத்தாதபடிக்கு, அதற்கு என்னை விலக்கிக் காத்தருளும் என்று வேண்டிக்கொண்டான்.

**கர்த்தர் என்ன செய்தார்?**

யாபேஸ் வேண்டிக் கொண்டதை தேவன் அருளினார்.

**கர்த்தர் உங்களுக்கு செய்யப்போவது என்ன?**

நீங்கள் வேண்டிக் கொண்டதை தேவன் அருள்வார்.

நீங்கள் வேண்டிக் கொள்ளப் போவதையும் அருள்வார். அல்லேலுயா!

**நீங்கள் வேண்டிக்கொள்ள வேண்டியது என்ன?**

1. தேவரீர் என்னை ஆசீர்வதியும்.
2. என் எல்லையைப் பெரிதாக்கும்.
3. உமது கரம் என்னோடிருக்கட்டும்.
4. தீங்கு என்னை துக்கப்படுத்தாதபடிக்கு, அதற்கு என்னை விலக்கிக் காத்தருளும் – என்பதாக. அல்லேலூயா!

**1. தேவரீர் என்னை ஆசீர்வதியும்**

வாக்குத்தத்தத்தை வாஞ்சையுடன் வாசிக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே, இப்பொழுதே முழங்கால் படியிட்டு, கண்களை மூடி, உங்களை தாழ்த்தி, பாவத்தை அறிக்கையிட்டு, தேவரீர் என்னை ஆசீர்வதியும் என்று கேளுங்கள்.

**ஆதி 26 : 12 சொல்கிறது,** ஈசாக்கு அந்த தேசத்திலே விதை விதைத்தான். கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால், அந்த வருஷத்தில் 100–மடங்கு பலன் அடைந்தான் – என்பதாக. இதே ஆசீர்வாதத்தை தேவன் உங்களுக்கும் கட்டளையிடுவார். ஆமென்.

**2. என் எல்லையைப் பெரிதாக்கும்** : இரண்டாவதாக, உங்கள் எல்லையைப் பெரிதாக்கும்படியாக தேவனிடம் கேளுங்கள். **ஆதி. 30 : 43 சொல்கிறது;** "இவ்விதமாய், (யாக்கோபாகிய) அந்தப் புருஷன் மிகவும் விருத்தியடைந்து, திரளான ஆடுகளும், வேலைக்காரிகளும், வேலைக்காரரும், ஒட்டகங்களும், கழுதைகளும் உடையவனானான்."

உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைப் பெருகப் பண்ணினார். இதோ இந்நாளில் நீங்கள் வானத்து நட்சத்திரங்களைப் போலத் திரளாயிருக்கிறீர்கள். நீங்கள் இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும், ஆயிர மடங்கு அதிகமாகும்படி உங்கள் பிராக்களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொல்லியபடியே உங்களை ஆசீர்வதிப்பாராக!

**3. உமது கரம் என்னோடிருப்பதாக :** மூன்றாவதாக, தேவனுடைய கரம் உங்களோடு இருக்கும்படியாய் வேண்டிக்கொள்ளுங்கள். ஏனெனில் **யோசு. 1 : 5** சொல்கிறது, "நான் மோசேயோடே இருந்தது போல, உன்னோடும் இருப்பேன்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை. உன்னைக் கைவிடுவதுமில்லை. பலங்கொண்டு, திடமனதாயிரு"–

**1 நாளாகமம் 11 : 9 சொல்கிறது,**

தாவீது நாளுக்கு நாள் விருத்தியடைந்தான், சேனைகளுடைய கர்த்தர் அவனோடே கூட இருந்தார்.–என்பதாக.

**4. தீங்கு என்னைத் துக்கப்படுத்தாதபடி, அதற்கு விலக்கிக் காத்தருளும்.**

நான்காவதாக, தீங்கு உங்களை துக்கப்படுத்தாதபடி வேண்டிக்கொள்ளுங்கள். **சங். 27 : 5 சொல்கிறது**, தீங்கு நாளில் அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து, என்னைத் தமது கூடார மறைவிலே, ஒளித்து வைத்து, என்னைக் கன்மலையாம் கிறிஸ்துவின் மேல் உயர்த்துவார். – என்பதாக. அல்லேலூயா!

என் அன்பு சகோதரனே, சகோதரியே,

**நீ வேண்டிக்கொண்டதை தேவன் கட்டாயம் அருள்வார்.**
**நீ வேண்டிக்கொள்ளப் போவதையும் தேவன் கட்டாயம் அருள்வார்.**